# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.

## TIRUVANNAMALAI.

**S.C. No 27/2015**
**PW 17**

Name : சாந்தலிங்கம்

Father's/Husband's Name : தாண்டவராயன்

Village :

Taluk/District :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 21.03.2025.

**Accused 1 - 3 Present.**

முதல் விசாரணை –

(1) நான் தற்போது கிருஷ்ணகிரி மாவட்ட குற்ற ஆவண காப்பகத்தில் காவல் துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2013 ம் ஆண்டு வேட்டவலம் காவல் உதவி ஆய்வாளர் தமிழரசு என்பவர் 01.04.2013 ம் தேதியன்று வழக்கு பதிவு செய்து வேட்டவலம் காவல் நிலைய குற்ற எண். 67/2013 இதச பிரிவுகள் 294(பி), 323, 324, 506(2) இதச வழக்கில் முதல் கட்ட விசாரணை முடித்து வைத்திருந்த வழக்கில் வழக்கில் காயம்பட்டு மேல் சிகிச்சைக்காக ஜிப்மர் மருத்துவ கல்லூரி மருத்துவமனை பாண்டிச்சேரியில் உள் நோயாளியாக அனுமதிக்கப்பட்டிருந்த சார்லஸ் என்பவர் சிகிச்சை பலன் அளிக்காமல் 02.04.2013 ம் தேதி மாலை சுமார் 15.00 மணிக்கு இறந்துவிட்டதாக தகவல் கிடைத்தது. **அந்த Death Intimation அ.சா.ஆ.23.** தகவலை பெற்று ஆய்வாளராகிய நான் சட்டப் பிரிவுகள் 294(பி), 324, 323, 506(2) இதச வழக்கினை 302 இதச கொலை வழக்காக பிரிவு மாற்றம்

செய்து ஒரு பிரிவு மாற்ற அறிக்கை தயாரித்தேன். அந்த பிரிவு மாற்ற அறிக்கை **அ.சா.ஆ.24**. அந்த பிரிவு மாற்ற அறிக்கையை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். பின்னர் அன்றையதினமே இறந்து போன சார்லஸ் என்பவரின் தாயார் பெரியநாயகி அம்மாள் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து கொண்டேன். பின்னர் 03.04.2013 ம் தேதியன்று காலை சுமார் 8.00 மணிக்கு பாண்டிச்சேரி ஜிப்மர் அரசு மருத்துவமனை சென்று அங்கு சவக்கிடங்கில் இறந்து கிடந்த சார்லஸ் என்பவரின் பிரேதத்தின் மீது பஞ்சாயத்தார் மற்றும் சாட்சிகளின் முன்னிலையில் ஒரு பிரேத விசாரணை அறிக்கை தயாரித்தேன். அந்த பிரேத விசாரணை அறிக்கை **அ.சா.ஆ.25.** பின்னர் சார்லஸ் என்பவரின் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்ய வேண்டி தலைமை காவலர் 880 செல்வராஜ் என்பவர் மூலம் மருத்துவ அலுவலருக்கு வேண்டுகோள் கடிதம் வழங்கினேன். பின்னர் சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து கொண்டேன். இந்த கொலை வழக்கில் சம்மந்தப்பட்ட 3 எதிரிகளையும் கைது செய்ய வேண்டி தனிப்படைகள் அமைத்தும், நானும் நேரில் சென்று வேட்டவலம், வீரபாண்டி, திருக்கோயிலூர், விழுப்புரம் ஆகிய இடங்களில் தேடி கிடைக்காததால் எனக்கு கிடைத்த இரகசிய தகவலின் பேரில் 03.04.2013 ம் தேதி பகல் சுமார் 12.30 மணிக்கு சோமாசிபாடி கிராமம், மாதா கோயில் அருகில் 1 வது எதிரி ஜான்விக்டர் மற்றும் 2 வது எதிரி மேரிஸ்டெல்லா ஆகியோரை போலீஸ் பார்ட்டி சகிதம் சுற்றி வளைத்து பிடித்து கைது செய்தோம்.

(2) முதலாவது எதிரி ஜான்விக்டர் என்பவரும், சாட்சிகள் சாலமன் ராஜ்குமார் மற்றும் வினோத்ராஜ் ஆகியோர் முன்னிலையில் பகல் சுமார் 12.30 மணிக்கு தானாக முன் வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் இறந்து போன சார்லஸ் என்பவரை கொலை செய்ய பயன்படுத்திய அரை செங்கல்லை தன் வீட்டின் பின்னால் மறைத்து வைத்திருப்பதாகவும், அதை எடுத்து ஆஜர் செய்தவதாகவும் கூறினார். அந்த அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.26.** பின்னர் 13.30 மணிக்கு 2 வது எதிரி மேரி ஸ்டெல்லா என்பவர் அதே சாட்சிகள் முன்னிலையில் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அதில் தான் கொலைக்காக பயன்படுத்திய மரக்கொம்பினை தன் வீட்டின் மாட்டு கொட்டகையில் மறைத்து வைத்திருப்பதை எடுத்து ஆஜர் செய்வதாக கூறினார். அந்த அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.27.** பின்னர் எதிரிகள், சாட்சிகள் போலீஸ் பார்ட்டி சகிதம் முதல் எதிரி ஒப்புதல் வாக்குமூலத்தில் சொன்ன வேட்டவலம் மாதா கோயில்

தெருவில் எதிரி ஜான்விக்டர் வீட்டின் பின்புறம் மறைத்து வைத்திருந்த சுமார் 1.540 கிலோ கிராம் எடையுள்ள அரை செங்கல் ஒன்று, அதில் அடிப்பாகம் தட்டையாகவும், வெளிப்பாகம் உடைந்தவாறும் இருந்தது. நீளம் சுமார் 11 செமீ, அகலம் சுமார் 9 – 1/2 செமீ. அதன் ஒரு பக்கம் மூலையில் இரத்தக்கறை படிந்திருந்தது. அதை எதிரி சாட்சிகள் முன்னிலையில் என்னிடம் ஆஜர்படுத்தினார். மேற்கண்ட வழக்குச் சொத்தினை அதே சாட்சிகள் முன்னிலையில் மகஜரில் கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ.28.** பின்னர் அன்றையதினமே மாலை சுமார் 16.30 மணிக்கு வழக்கின் 2 வது எதிரி மேரிஸ்டெல்லா என்பவர் வேட்டவலம் மாதா கோயில் தெருவில் உள்ள அவரது வீட்டில் மாட்டுக்கொட்டகையில் மறைத்து வைத்திருந்த ஒரு கொம்பினை சாட்சிகளின் முன்னிலையில் என்னிடம் ஆஜர்படுத்தினார். அது சுமார் 77 செமீ நீளமுள்ள மரக்கொம்பு, அதன் அடிப்பாகம் விட்டம் சுமார் 2 – 1/2 செமீ அகலம் இருந்தது. அதன் நுனிப்பாகத்தின் விட்டம் சுமார் 2 செமீ அகலம் இருந்தது. அதன் பருமன் சுமார் 9 செமீ சுற்றளவு இருந்தது. மேற்கண்ட வழக்குச் சொத்தினை அதே சாட்சிகள் முன்னிலையில் மகஜரில் கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ.29**. பின்னர் மாலை சுமார் 17.00 மணிக்கு வழக்கின் 1, 2 எதிரிகள் மற்றும் போலீஸ் பார்ட்டி சகிதம் நிலையம் வந்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். வழக்கின் சொத்தினை படிவம் 91 ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பினேன்.

(3) பின்னர் இந்த வழக்கில் தலைமறைவாக இருந்த 3 வது எதிரி விமலா என்பவரை தேடி தக்க புலன் வைத்தும் எனக்கு கிடைத்த இரகசிய தகவலின் பேரில் திருவண்ணாமலை நகர பஸ் ஸ்டாண்டு எதிரில் ஆகாஷ் ஓட்டல் முன்பு 04.04.2013 ம் தேதியன்று மாலை சுமார் 15.30 மணிக்கு போலீஸ் பார்ட்டி சகிதம் சுற்றி வளைத்து கைது செய்தேன். பின்னர் இவ்வழக்கின் 3 வது எதிரி விமலா என்பவர் சாட்சிகள் தேவசகாயம், கோவிந்தராஜ் ஆகியோர் முன்னிலையில் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் கொலை செய்ய தான் பயன்படுத்திய ஒரு மரக்கொம்பினை தன் வீட்டின் பின்புறம் மறைத்து வைத்திருப்பதாகவும், அதை தன்னை அழைத்து சென்றால் ஆஜர் செய்வதாகவும் சொன்னார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை நான் பதிவு செய்தேன். மேற்படி சாட்சிகளும், எதிரிகளும் அதில் கையொப்பம் செய்தார்கள்.

(4) அன்றையதினமே மாலை 17.30 மணிக்கு வழக்கின் 3 வது எதிரி விமலா மற்றும் சாட்சிகளுடன் வேட்டவலம் மாதா கோயில் தெருவில் உள்ள 3 வது எதிரி விமலா என்பவரின் வீட்டின் பின்புறம் அவர் மறைத்து வைத்திருந்த ஒரு மரக்கொம்பினை எடுத்து ஆஜர்படுத்தினார். அது சுமார் 78 செமீ நீளமும், அதன் அடிப்பாகம் கூராகவும், நுனிப்பாகம் தட்டையாகவும் இருந்தது. அதன் அடிப்பாகம் சுற்றளவு சுமார் 12 செமீ இருந்தது. அதன் நுனிப்பாகம் சுற்றளவு சுமார் 11 செமீ ஆக இருந்தது. அதனை மேற்படி சாட்சிகளின் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன். அந்த மகஜர் அ.சா.ஆ.2 தான். பின்னர் எதிரி விமலாவுடன் காவல் நிலையத்திற்கு வந்து முறைப்படி திரேக பரிசோதனை செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். பின்னர் வழக்கில் கைப்பற்றிய வழக்குச் சொத்துக்களை படிவம் 91 ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பினேன். இவ்வழக்கில் கொலையுண்டு இறந்துபோன சார்லஸ் என்பவரின் உடல் உள் உறுப்புகளை பகுப்பாய்வு செய்ய வேண்டி நீதிமன்றத்தில் வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். இவ்வழக்கில் பல்வேறு சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து கொண்டேன். சார்லஸ் என்பவரின் பிரேதத்தினை பிரேத பரிசோதனை செய்ய வேண்டி மருத்துவ அலுவலர் அவர்களிடம் ஆஜர் செய்த தலைமை காவலர் செல்வராஜ் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து கொண்டேன். உடல் உள் உறுப்புகளை பகுப்பாய்விற்கு அனுப்பி கொண்ட நீதிமன்ற தலைமை எழுத்தர் முனீஸ்வரி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து கொண்டேன். இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை தயாரித்து முதல் விசாரணை செய்த உதவி ஆய்வாளர் தமிழரசு என்பவரை விசாரித்தேன். பின்னர் நான் வேறு காவல் நிலையத்திற்கு பணி மாறுதலில் சென்றதால் வழக்குக் கோப்புகளை காவல் நிலையத்தில் ஒப்படைத்தேன். எனது விசாரணையில் சாட்சிகள் சாலமன்ராஜ்குமார், கோவிந்தராஜ் மற்றும் வினோத்ராஜ் ஆகியோர் 161 குவிமுச விசாரணை வாக்குமூலத்தில் கண்டவாறு என் விசாரணையில் கூறியுள்ளார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை** –

(1) இந்த வழக்கில் நான் முதல் புலன் விசாரணை அதிகாரியா என்றால் எனக்கு முன்பு உதவி ஆய்வாளர் தமிழரசு என்பவர் விசாரணை செய்தார். அவர் 02.04.2013 அன்று மாலை 15.00 மணிக்கு வழக்குக் கோப்பை ஒப்படைத்தார். தமிழரசு என்பவர் என்னுடைய அனுமதி

பெற்று பாண்டிச்சேரி ஜிப்மர் மருத்துவமனைக்கு சென்று புகார் வாக்குமூலம் பெற்றார் என்றால் சரிதான். அந்த புகார் வாக்குமூலம் 01.04.2013 அன்று 14.30 மணிக்கு பதிவு செய்யப்பட்டதாக கண்டுள்ளது என்றால் சரிதான். எனக்கு கிடைத்த Death Intimation ல் சார்லஸ் 01.04.2013 அன்று 14.22 மணிக்கு அனுமதிக்கப்பட்டதாக கண்டுள்ளது என்றால் சரிதான். புகார் வாக்குமூலம் பதிவு செய்த தமிழரசு எனது விசாரணயில் தனக்கு ஜிப்மர் மருத்துவமனையில் இருந்து 12.00 மணிக்கு இன்டிமேஷன் கிடைத்தாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான். 3 எதிரிகளின் ஒப்புதல் வாக்குமூலங்களையும் நான் தான் பதிவு செய்தேன். பிரேத விசாரணை அறிக்கையை நான் கைப்பட தயார் செய்தேன். நான் பிரேத விசாரணையின் போது உடன் இருந்து பஞ்சாயத்தார்களின் வாக்குமூலங்களை பதிவு செய்தேனா என்றால் நான் பதிவு செய்யவில்லை. உதவி ஆய்வாளர் பதிவு செய்தார். பிரேத விசாரணை நான் தான் செய்தேன். பஞ்சாயத்தார்களின் பெயர்கள் சாட்சி பட்டியலில் இல்லையென்றால் சரியல்ல.

(2) 3.04.2013 ம் தேதியிட்ட இரண்டு மகஜர்களையும் படிவம் 91 யையும் நான் என் கைப்பட தயாரித்தேன். 3 ம் தேதியிட்ட இரண்டு மகஜரிலும் 04.04.2013 ம் தேதியிட்ட மகஜரில் உள்ள கையெழுத்துக்கள் மாறுபட்டு உள்ளது என்றால் சரியல்ல. 04.04.2013 ம் தேதியிட்ட மகஜரில் காலம் நெம்பர் 4 ல் சாட்சிகளின் பெயர் மற்றும் விலாசம் வேறு ஒரு மையினால் வேறு ஒரு நபரால் எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என்னிடம் இருந்த பேனாவால் தான் எழுதப்பட்டது. சார்லஸ் ஜிப்மர் மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தபோது தயார் செய்த விபத்து பதிவேட்டு நகலை நான் கைப்பற்றவில்லை என்றால் சரிதான். விபத்து பதிவேட்டு நகலை தயார் செய்த மருத்துவரை விசாரித்து நான் வாக்குமூலம் பெற்றேனா என்றால் இல்லை. ஜிப்மர் மருத்துவமனையில் சார்லசிற்கு சிகிச்சை அளித்த மருத்துவரை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். வேட்டவலம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் உள்ள மருத்துவர்களை நான் விசாரிக்கவில்லை என்றால் சார்லஸ் விழுப்புரம் மருத்துவமனையில் தான் முதலில் சேர்ந்தார். அந்த மருத்துவமனையில் சார்லசிற்கு சிகிச்சை அளித்த அரசு மருத்துவரை விசாரித்து வாக்குமூலம் வாங்கவில்லை என்றால் சரிதான். எனக்கு பின்னால் விசாரணை செய்த ஆய்வாளர் அவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். நான் இந்த வழக்கில் 15 நாட்கள் புலன் விசாரணை அதிகாரியாக செயல்பட்டேன். அந்த 15 நாட்களில்

மருத்துவர்களை விசாரிக்க நான் முயற்சி செய்யவில்லை என்றால் சரியல்ல. புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து யாருடையது என்றால் எனக்கு தெரியாது. கைது குறிப்பாணை காலம் நெம்பர் 11 ல் கைது செய்யப்பட்ட நபர் மருத்துவ சிகிச்சைக்கு அனுப்பப்பட்டாரா என்ற விவரம் நான் கைது செய்த எதிரிகள் 1 முதல் 3 கைது செய்த குறிப்பாணையில் குறிப்பிடப்படவில்லை என்றும் கைதுக்கான காரணம் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். என்னுடைய புலன் விசாரணை சந்தேகத்திற்குரியது என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் எதிரிகளை கைது செய்யவில்லை என்றும், அவர்களிடம் எந்தவித ஒப்புதல் வாக்குமூலமும் பெறவில்லை என்றால் சரியல்ல. அவர்களிடமிருந்து எந்தவித வழக்குச் சொத்தும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. ஜிப்மர் அரசு மருத்துவமனை ஆவணங்களை தாக்கல் செய்தால் வழக்கிற்கு பாதகமாக அமையும் என்பதால் வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லையென்றால் சரியல்ல.

**Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.**

**Sd/-B.C.Gopinath.,M.L.,**
**Additional District Judge,**
**Tiruvannamalai.**